JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 60/2026 | Crime No. | 306/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-1- அசோக்குமார்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 06th day of March 2026 | | | |

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்**

**முதல் விசாரணை**

நான் கடந்த 1 – 1/2 வருடமாக குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது வங்கியில் சாவி இல்லாமல் வலுக்கட்டாயமாக யாராவது கதவை திறந்தால் எனது செல்போன் எண்ணுக்கு மெசேஜ் வரும். இந்நிலையில் கடந்த 29.11.2025 ஆம் தேதியன்று, இரவு12 மணிக்கு எனது செல்போனுக்கு அலாரம் மெசேஜ் வந்தது. பின்னர் இரவு 12:30 மணிக்கு நானும், எனது Business Correspondent ராஜேந்திரன் என்பவரும் வங்கி கிளைக்கு சென்று பார்த்தோம். அப்பொழுது பெரிதாக சேதம் அடைந்தது எதுவும் தெரியவில்லை. பின்னர் 01.12.2025 ஆம் தேதியன்று, காலை 11.00 மணிக்கு வங்கிக்கு சென்று வங்கியில் இருந்த CCTV footage ஐ பார்த்தபோது எனக்கு SMS வந்த தினத்தில் இரவு 12.00 மணிக்கு முகமூடி அணிந்து வந்த நபர் கம்பியை வைத்து ATM ஐ திறக்க முயற்சி செய்தது தெரியவந்தது. அதன் பின்னர் திருட முயற்சி செய்ததற்காக நான் காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எங்கள் வங்கியில் இருந்த ATM மிஷினில் கம்பியை வைத்து திருட முயற்சி செய்த நபர் ஆஜர் எதிரி தான். சாட்சி, எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரங்களை சொன்னேன்

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.06 15:33:33 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான். நான் யார் சொல்லி புகார் கொடுத்தேன் என்றால், நான் அந்த வங்கியின் கிளை மேலாளர் என்பதால் புகார் கொடுத்தேன். புகாரானது 02.12.2025 ஆம் தேதி தான் கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி 2 நாட்கள் காலதாமதத்திற்கு காரணம் எதுவும் எனது புகாரில் கூறவில்லை என்றால், சனி, ஞாயிறு என்பதால் திங்கட்கிழமை புகார் கொடுத்தேன். நான் எதை வைத்து எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்று சொல்கிறேன் என்றால், CCTV பதிவுகளை பார்த்தேன். அதில் எதிரியை போன்று உருவம், உயரம் இருந்தால் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

CCTV பதிவுகளை போலீஸ் விசாரணையின்போது, போலீசாரிடம் நான் கொடுத்தேன் என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.06 15:33:41 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-2  Witness
for Prosecution

| CC.No. | 60/2026 | Crime No. | 306/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-2- ராஜவேல் பிரசாத்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 06th day of March 2026 | | | |

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில்உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.11.2025 ஆம் தேதி, நான் குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் இரவு 12.30 மணிக்கு எங்கள் வங்கியின் மேலாளர் அசோக்குமார் என்பவருக்கு ATM பெட்டகத்தை திறந்ததுபோல் குறுஞ்செய்தி வந்ததாக எனது மேலாளர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அதன் பின்னர் மேலாளர் அசோக்குமார் என்பவரும் மற்றும் BC ராஜேந்திரன் என்பவரும் கிளம்பி சென்று ATM மெஷினை சோதனை செய்தார்கள். அதில் சேதம் எதுவும் இல்லை என்றும் நல்ல முறையில் தான் உள்ளது என்று கிளை மேலாளர் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். பின்னர் 02.12.2025 ஆம் தேதி, காலை வங்கிக்கு வந்தவுடன் காலை 11:30 மணிக்கு மேல் கிளை மேலாளர் அசோக்குமார் அவர்களுடன் BC ராஜேந்திரன் என்பவரும் CCTV footage ஐ சோதனை செய்தார்கள். அதை முதலில் கிளை மேலாளர் அசோக்குமார் என்பவரும் BC ராஜேந்திரன் என்பவரும் பார்த்தார்கள். அதில் ஒரு நபர் மாஸ்க் போட்டு கொண்டு தலைப்பாக் கட்டிக்கொண்டு இரும்பு கம்பியை வைத்து ATM லாக்கரை நெம்பிக் கொண்டு இருந்தது தெரிந்தது பின்னர் நானும் அந்த CCTV footage ஐ பார்த்தபோது தெரிந்தது. பின்னர் கிளை மேலாளர் அடுத்த நாள் காவல் நிலையம் சென்று இது பற்றி புகார் கொடுத்தார். நான் CCTV footage ல் பார்த்த நபரை ஒரு முறைதான் பார்த்ததால் எனக்கு சரியாக அடையாளம் தெரியவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை சொன்னேன்

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.06 15:33:55 +0530

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை**

**எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால், சரிதான். மேனேஜர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால், சரிதான். நான் சொல்வது போல். சம்பவம் நடைபெறவில்லை என்றாலும். எனது மேனேஜர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.06 15:34:01 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 60/2026 | Crime No. | 306/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-3-ராஜேந்திரன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 06th day of March 2026 | | | |

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் Business Correspondent ஆக வேலை செய்து வருகிறேன். சாட்சி அசோக்குமார் எங்கள் வங்கியின் மேலாளர். கடந்த 29.11.2025 ஆம் தேதி எங்கள் வங்கியின் மேலாளர் அசோக்குமார் அவர்களுக்கு இரவு 12.00 மணிக்கு Wall Door Open ல் உள்ளதாக குறுஞ்செய்தி வந்ததாக மேலாளர் அசோக்குமார் அவர்கள் என்னிடம் போன் மூலம் தகவல் சொன்னார். பின்னர் அவர் அம்மாபேட்டையில் இருந்து கிளம்பி அரை மணி நேரத்தில் குருவரெட்டியூரில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு வந்தார். என்னையும் வரச் சொன்னார். நானும் அங்கு சென்றேன். நாங்கள் சென்று பார்த்தபோது கதவு திறந்தது மாதிரியான எந்த வித அடையாளங்களும் இல்லை. அதன் பின்னர் வீட்டிற்கு சென்று விட்டோம். அடுத்த நாள் வங்கி விடுமுறை. பின்னர் அடுத்த வேலை தினமான 01.12. 2025 ஆம் தேதி வங்கிக்கு சென்றவுடன் காலை 1.00 மணிக்கு மேல் மேலாளர் அசோக்குமார் அவர்கள் வங்கியின் CCTV footage ஐ பார்த்துவிட்டு மர்ம நபர் முகமூடி போட்டுக்கொண்டு ATM Door ஐ உடைப்பதற்கு முற்படுகிறார் என்று சொன்னார். அவர் CCTV footage ல் இருந்த வீடியோவில் உடைக்க முயன்றதை என்னிடமும் காட்டினார். நானும் பார்த்தேன். CCTV footage ல் இருந்த நபரை ATM மெஷினை உடைக்க முயன்ற நபரை பார்த்தால் அடையாளம் சொல்ல இயலாது, ஏனென்றால் அவர் மாஸ்க் அணிந்திருந்தார். தலைப்பாக்கட்டு அணிந்திருந்தார். பின்னர் இது பற்றி வங்கியின் மேலாளர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்னர் அடுத்த நாள் காலை 10.00 மணிக்கு போலீசார் வங்கிக்கு வந்தார்கள். ATM ஐ உடைக்க முற்பட்டது உண்மைதானா என்று விசாரித்தார்கள். நானும் உண்மைதான் என்று போலீசாரிடம் சொன்னேன். பின்னர் போலீசார் விசாரித்து என்னிடமும், பெருமாள்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.06 15:34:16 +0530

என்பவரிடமும் சாட்சி கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் முதல் விசாரணை சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.06 15:34:22 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

| CC.No. | 60/2026 | Crime No. | 306/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-4-** பெருமாள் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 06th day of March 2026 | | | |

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் cashier ஆக வேலை செய்து வருகிறேன். சாட்சி அசோக்குமார் எங்கள் வங்கியின் மேலாளர். கடந்த 29.11.2025 ஆம் தேதி எங்கள் வங்கியின் மேலாளர் அசோக்குமார் அவர்களுக்கு இரவு 12.00 மணிக்கு Wall Door Open ல் உள்ளதாக குறுஞ்செய்தி வந்ததாக மேலாளர் அசோக்குமார் அவர்கள் என்னிடம் போன் மூலம் தகவல் சொன்னார். அவர்கள் சென்று பார்த்தபோது கதவு திறந்தது மாதிரியான எந்த வித அடையாளங்களும் இல்லை என்று தெரிந்து கொண்டேன். அடுத்த நாள் வங்கி விடுமுறை. பின்னர் அடுத்த நாள் காலை 10.00 மணிக்கு போலீசார் வங்கிக்கு வந்தார்கள். ATM ஐ உடைக்க முற்பட்டது உண்மைதானா என்று விசாரித்தார்கள். நானும் உண்மைதான் என்று போலீசாரிடம் சொன்னேன். பின்னர் போலீசார் விசாரித்து என்னிடமும், ராஜேந்திரன் என்பவரிடமும் சாட்சி கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். . இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால், சரியல்ல. வங்கியில் வைத்து செய்தேன். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால், சரிதான். எனது கிளை மேலாளர் வேண்டுகோளுக்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.06 15:34:43 +0530

மறு விசாரணை இல்லை

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.06 15:34:48 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani